

தனி பிரதி
ரூ.10/-

Single Copy
Rs.10/-



ANNUAL SUBSCRIPTION
Rs.120/-

# பொறியியல் கதிர்
# PORIYIYAL KADHIR


TAMIL & ENGLISH MONTHLY


| கதிர் 50 | பாரிப்பு 1 | திருவள்ளுவர் ஆண்டு 2050 | செப்டம்பர் 2019 |
|---|---|---|---|
| KADHIR 50 | PAARIPPU 1 | THIRUVALLUVAR AANDU 2050 | SEPTEMBER 2019 |



## செப்டம்பரில் உதித்தவர்கள் !
## ஜெகத்தினை ஜெயித்தவர்கள் !



தந்தை பெரியார்



சர். விஸ்வேஸ்வரய்யா



அறிஞர் அண்ணா


நூற்றாண்டு விழா சங்கம் - A CENTENARY ASSOCIATION

தோற்றம்
1910

தமிழ்நாடு பொறியியல் சங்கம்
பொதுப்பணித்துறை
சேப்பாக்கம், சென்னை - 600 005.

நூற்றாண்டு
2010

அரசு ஆணை எண்: Ms. 822 நாள். 27.09.1928 அங்கீகரிக்கப்பட்டது

TAMILNADU ENGINEERING ASSOCIATION - PWD
CHEPAUK, CHENNAI - 600 005.

Website : www. tnengga. org        email id : tneapwd@yahoo.co.in

# 2019 - 2020 ஆம் ஆண்டிற்கான புதிய மையச் சங்கப் பொறுப்பாளர்கள் உறுதிமொழி எடுத்தல்



பொதுச் செயலாளர் மடல்

மடல் - 1 (2019 - 2020)



## தொடரும்

## நம் பயணம் .......

**அன்பார்ந்த பொறியாளர் சகோதர, சகோதரிகளே! வணக்கம்!**

என்னை மீண்டும் பொதுச்செயலாளராக தேர்ந்தெடுத்த உங்கள் அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். எப்போதும் போல் என் கடமையை நேர்மையாக செய்வேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

தானாக நடக்க வேண்டிய காரியங்கள் கூட போராடி போராடி பெற வேண்டிய நிலை. தலைமைப் பொறியாளர் (பொது) பதவிக்கு வருகிறவர்களில் பெரும்பாலானோர் (ஒரு சிலரை தவிர) நேர்மையற்றவர்களாகவும், நடுநிலைமை அற்றவர்களாகவும் இருப்பதுதான் அனைத்து பிரச்சினைகளுக்கும் காரணம். நமக்குள்ள பிரச்சினைகளுக்கு எல்லாம் காரணம் அரசு அல்ல. தலைமைப் பொறியாளர்கள் மட்டுமே.

உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வை பொறுத்த வரையில் ஊட்டுப் பதவியிலிருந்து வந்த உதவிப் பொறியாளர்களுக்கு மட்டும் பதவி உயர்வு வழங்காமல் அவர்களுக்கு பதவிகளை ஒதுக்கி வைத்து விட்டு (Reserve) மீதமுள்ளவர்களுக்கு உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு வழங்க பரிந்துரை செய்து முன்னாள் தலைமைப் பொறியாளர் (பொது) திரு.M.பக்தவத்சலம் அவர்கள் அரசுக்கு கருத்துரு அனுப்பினார். ஆனால் இது விதிகளுக்கு புறம்பானது என்று அரசு ஒத்துக்கொள்ளவில்லை.

தற்போதைய தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களும் இது சம்பந்தமாக முன்னாள் தலைமைப் பொறியாளர் அனுப்பிய கருத்துருக்கு ஆதரவாக Advocate General அவர்களுக்கு கருத்து கேட்டு (Openian) பதில் பெற்றுள்ளார். இது சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து ஆணை பெற்ற பிறகு பதவி உயர்வு வழங்கலாம் என Advocate General கருத்து

தெரிவித்ததின் பேரில் தற்போது நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருக்கிறார்கள். வழக்கை எதிர் கொள்ள நாம் தயாராக உள்ளோம்.

கடந்த 06.09.2019 அன்று தலைமைப் பொறியாளர் (பொது) அவர்கள் இரண்டு சங்கங்களையும் அழைத்து உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு சம்பந்தமாக பேச்சு வார்த்தை நடத்தினார். நமது சகோதர சங்கம் ஊட்டுப்பதவியிலிருந்து வந்த உதவிப் பொறியாளர்களுக்கு உதவிப் பொறியாளர் முதுநிலையில் வைத்து 75% விகிதாச்சாரத்தில் பதவி உயர்வு வழங்கக்கூடாது என்பதில் பிடிவாதமாக இருந்தார்கள். எனவே பேச்சு வார்த்தை முடிவுக்கு வரவில்லை. எனவே இன்னொரு நாள் பேச்சு வார்த்தை தொடரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. பேச்சு வார்த்தை இன்னொரு நாள் தொடரும்.

செயற்பொறியாளர் பதவி உயர்வை பொறுத்த வரையில் நீதிமன்றத்தில் Status quo இருப்பதால் வழக்கு முடிந்த பின்னரே பதவி உயர்வு வழங்க வேண்டும் என்று Additional Advocate General அவர்கள் கருத்து (Openian) தெரிவித்துள்ளார். (உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வுக்கும் Status quo உள்ளது. இதில் மட்டும் வேறு விதமான Openian). தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்ட உதவிப் பொறியாளர்களின் முதுநிலை சம்பந்தப்பட்ட வழக்கு விசாரணை பத்து நாட்களுக்கு முன்பு விசாரணைக்கு வந்து 3 நாட்கள் விசாரணை நடந்து விசாரணை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

**வாழ்க தமிழ்நாடு பொறியியல் சங்கம்**
**வளர்க பொறியாளர்களின் சங்க உணர்வு**
**தேச நலன் காப்போம்.**

இத்துடன் இந்த மடலை நிறைவு செய்கிறேன். மீண்டும் அடுத்த மடலில் சந்திப்போம். நன்றி.

(த. முருகேசன்)
பொதுச் செயலாளர்

**Er.D. MURUGESAN, General Secretary**
**Cell Nos.** 9444 999 588 / 988 444 98 97
E.mail: d.murugavelsivan@gmail.com

# மதுரையில் நடைபெற்ற மாநிலப் பொதுக்குழுக் கூட்டம்

பாரம்பரியமிக்க தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மாநிலப் பொதுக்குழுக் கூட்டம் 11.08.2019 அன்று மதுரை தமிழ்நாடு ஹோட்டலில் நடைபெற்றது.

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மாநிலப் பொதுக்குழுக் கூட்டம் 11.08.2019 அன்று காலை 10.30 மணி அளவில் மதுரை தமிழ்நாடு ஹோட்டலில் மாநிலத்தலைவர் பொறியாளர் சு. லீலாவதி அவர்கள் தலைமையிலும், பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்கள் முன்னிலையிலும் தமிழ்த்தாய் வாழ்த்துடன் இனிதே தொடங்கியது.

பொதுக்குழுவிற்கு வருகை புரிந்த மையச் சங்க பொறுப்பாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் ஆகியோரை அமைப்பு மற்றும் சட்டச் செயலாளர் பொறியாளர் எஸ்.கண்ணன் அவர்கள் அவைக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

பொதுக்குழுவிற்கு வருகை புரிந்த அனைவரையும் மதுரை கிளை சார்பாக அதன் தலைவர் பொறியாளர் ஏ.திருவேங்கடமூர்த்தி அவர்களும் மையச் சங்கம் சார்பாக மைய மண்டலச் செயலாளர் பொறியாளர் பி.தமிழ்செல்வம் அவர்களும் வரவேற்று பேசினார்கள். மையச் சங்கப் பொறுப்பாளர்களுக்கும் சிறப்பு அழைப்பாளர்களுக்கும் சால்வை அணிவித்து கௌரவிக்கப்பட்டது.

அடுத்து சங்க உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் உறவினர்கள் மறைவிற்கு இரங்கல் தெரிவித்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாநிலத் தலைவர் பொறியாளர் சு.லீலாவதி அவர்கள் தலைமை உரையில் சங்க நடவடிக்கைகள் பற்றி பேசினார்.

அதனை அடுத்து மாநில துணைத் தலைவர் பொறியாளர் நா. பாஸ்கர் அவர்கள் உரையாற்றினார்.

பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்கள் தமது உரையில் சங்க நடவடிக்கைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

உறுப்பினர் கருத்துக்கள் பகுதியில் மதுரை கிளையின் உறுப்பினர் பொறியாளர் கே.ராமநாதன், மதுரை கிளையின் தலைவர் பொறியாளர் ஏ.திருவேங்கடமூர்த்தி, திருச்சி கிளையின் துணைத்தலைவர் பொறியாளர் என்.முருகேசன், சிவகங்கை கிளையின் தலைவர் பொறியாளர் வி.பரமசிவம், தஞ்சாவூர் கிளையின் தலைவர் பொறியாளர் ஆர்.வேதமூர்த்தி, சிவகங்கை கிளையின் துணைத்தலைவர் பொறியாளர் சி.இராஜ், திருச்சி கிளையின் உறுப்பினர் எஸ்.கந்தசாமி, தருமபுரி கிளையின் துணைத்தலைவர் பொறியாளர் எஸ்.கிருஷ்ணன், சேலம் கிளையின் செயலாளர் பொறியாளர் சி.பன்னீர் செல்வம், இராமநாதபுரம் கிளையின் பொருளாளர் பொறியாளர் ஜெ.ரவீந்திரன், மதுரை கிளையின் உறுப்பினர் சி.பி.மோகன் குமார், விருதுநகர் கிளை உறுப்பினர் பொறியாளர் ஆர்.அழகர்சாமி, தருமபுரி கிளை உறுப்பினர் பொறியாளர் ஜி.பழனிசாமி, தேனி கிளையின் பொருளாளர் மா.சென்ராம் ஆகியோர் பொதுச் செயலாளர் உரையின் மீது தங்களது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

உறுப்பினர்களின் சந்தேகங்களுக்கு பொதுச் செயலாளர் அவர்கள் மிக விரிவான நீண்ட விளக்கம் அளித்தார்.

கல்வி பரிசுத் திட்டத்தில் பரிசு பெற்றவர்களுக்கு பரிசு தொகையை மையச் சங்க பொறுப்பாளர்கள் வழங்கினார்கள்.

நிதிச் செயலாளர் பொறியாளர் கொ.கமால்தீன் அவர்கள் 01.08.2018 முதல் 31.07.2019 வரை உள்ள காலத்திற்கான வரவு செலவு அறிக்கையினை அவைக்கு தாக்கல் செய்து பின் ஒப்புதல் பெற்றார்.

பொங்கும் நிதிச் செயலாளர் பொறியாளர் நா. புண்ணியகோடி அவர்கள் 01.08.2018 முதல் 31.07.2019 வரை உள்ள காலத்திற்கான வரவு செலவு அறிக்கையினை அவைக்கு தாக்கல் செய்து பின் ஒப்புதல் பெற்றார்.

சிவகங்கை கிளை உறுப்பினர் எஸ்.கருப்பையா அவர்கள் மறைவையொட்டி அவர்களின் குடும்பத்திற்கு பொங்கும் நிதி காசோலையை பொதுச்செயலாளர் வழங்கினார்.

வெளியீட்டுச் செயலாளர் பொறியாளர் எஸ்.கே.கருப்புசாமி அவர்கள் பொறியியல் கதிர், நாட்காட்டி, நாட்சுவடி 2020-ன் தற்போதைய நிலை குறித்து எடுத்துரைத்தார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் அமைப்பு மற்றும் சட்டச்செயலாளர் பொறியாளர் எஸ்.கண்ணன் மற்றும் நிதிச்செயலாளர் பொறியாளர் கொ.கமால்தீன் ஆகியோருக்கு பணி ஓய்வு பாராட்டு விழா நடைபெற்றது. பொதுச்செயலாளர் த.முருகேசன் அவர்கள் பொன்னாடையும், நினைவுப்பரிசும் வழங்கினார்.

ஓய்வு பெற்ற பொறியாளர்களை பாராட்டி கிளைப் பொறுப்பாளர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். அமைப்பு மற்றும் சட்டச்செயலாளர் பொறியாளர் எஸ்.கண்ணன் மற்றும் நிதிச்செயலாளர் பொறியாளர் கொ.கமால்தீன் ஆகியோர் ஏற்புரை வழங்கினர்.

2019-2020 ஆம் ஆண்டிற்கான புதிய பொறுப்பாளர்களை தேர்ந்தெடுக்க தேர்தல் அதிகாரிகளாக ஓய்வு பெற்ற பொறியாளர்கள் எஸ்.நந்தகுமார், ம.சவரிராஜ், பி.குலசேகரன் ஆகியோர் நியமிக்கப்பட்டார்கள்.

தேர்தலில் 2019-2020 ஆம் ஆண்டிற்கான மையச் சங்கப் பொறுப்பாளர்களாக கீழ்க்கண்ட பொறியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

| பொறியாளர்கள் | |
|---|---|
| தலைவர் | சு. பாஸ்கரன் |
| துணைத் தலைவர் | சி.பி. மோகன்குமார் |
| பொதுச்செயலாளர் | த. முருகேசன் |
| செயலாளர் அமைப்பு & சட்டம் | எஸ். சண்முகானந்தன் |
| செயலாளர் வெளியீடு | எஸ். கே. கருப்புசாமி |
| செயலாளர் (நிதி) | எஸ். பார்த்தசாரதி |
| செயலாளர் (பொங்கும் நிதி) | என்.புண்ணியகோட்டி |
| **மண்டலச் செயலாளர்கள்** | |
| வடக்கு | ஆ. அன்புச்செழியன் |
| கிழக்கு | ஆர். வேதமூர்த்தி |
| மேற்கு | வி. காசிவிஸ்வநாதன் |
| தெற்கு | வெ. ராமகிருஷ்ணன் |
| மையம் | வி. பரமசிவம் |

புதிய பொறுப்பாளர்கள் உறுதி மொழி எடுத்துக் கொண்டனர்.

மூத்த பொறியாளர்கள் ம.பலராமன் அவர்கள் புதிய பொறுப்பாளர்களை வாழ்த்தி பேசினார்கள்.

மையச் சங்க பொறுப்பாளர்கள் சார்பாக பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்கள் ஏற்புரை வழங்கினார்.

பொதுக்குழுவில் உறுப்பினர்களின் விவாதங்களுக்கு பிறகு பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மைய மண்டத்தின் சார்பாக மதுரை கிளை தலைவர் பொறியாளர் ஏ.திருவேங்கடமூர்த்தி அவர்களும் மையச் சங்கம் சார்பாக அமைப்பு மற்றும் சட்டச் செயலாளர் பொறியாளர் எஸ்.சண்முகானந்தன் அவர்களும் நன்றி கூற நாட்டுப் பண்ணுடன் கூட்டம் இனிதே முடிவுற்றது.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**தீர்மானங்கள்:**

1. பொதுப்பணித்துறையில் நேர்மையான, திறமையான, நடுநிலையான நல்ல நிர்வாகம் நடைபெற துறைத்தலைமைக்கு IAS அதிகாரி நியமிக்கப்பட வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

2. குடிமராமத்து மற்றும் காவிரி டெல்டா கண்காணிப்பு அதிகாரி, கூடுதல் செயலாளர் (Additional Secretary) மரியாதைக்குரிய திரு. M.பாலாஜி IAS அவர்கள் மிக சிறப்பாக திறமையாக செயல்பட்டு வருகிறார். அவருக்கு இம்மாநில பொதுக்குழு பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறது.

3. நீர்வள, நிலவள திட்ட இயக்குநர் (IAMWARM), திரு. விபு நய்யார் IAS, Minning and Monitoring இயக்குநர் திரு. T.அருண் தம்புராஜ் IAS குடிமராமத்து மற்றும் காவிரி டெல்டா கண்காணிப்பு அதிகாரி திரு. M.பாலாஜி IAS போன்ற அதிகாரிகளின் தலைமையில் மிகச்சிறப்பான நிர்வாகம் நடைபெற்று வருகிறது. இது போலவே நேர்மையான, திறமையான நிர்வாகம் நடைபெற பொதுப்பணித்துறையில் உள்ள அனைத்து பணிகளையும் IAS அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் கொண்டுவர இம்மாநில பொதுக்குழு தமிழக அரசை கேட்டுக் கொள்கிறது.

4. பொதுப்பணித்துறை நிர்வாகம் மேம்பட தமிழ்நாடு பொறியியல் பணிவிதிகளில் (Tamil Nadu Engineering Service Rules) உள்ளது போல், மற்ற மாநிலங்களில் உள்ளது போல், மத்திய அரசில் உள்ளது போல் ஏற்கனவே தமிழக பொதுப்பணித்துறையில் கடைபிடித்தது போல் உதவி செயற்பொறியாளர் (Assistant Executive Engineer) பதவிகளில் 5.88% பதவிகளை நேரடி நியமனம் மூலம் தேர்வு செய்ய வேண்டுகிறோம்.

5. தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையத்தில் (TNPSC) நீண்ட நாட்கள் நிலுவையில் உள்ள 304 இளநிலைப்பொறியாளர் பதவிகள் தேர்வு செய்ய தமிழக அரசை கேட்டுக்கொள்ள தீர்மானிக்கப்படுகிறது.

6. தலைமைப் பொறியாளர் அலுவலகத்திலிருந்து வேண்டுமென்றே தொலைக்கப்பட்ட, நீண்ட நாட்கள் நிலுவையிலுள்ள, இளம் பொறியாளர் பதவியினை TNESSலிருந்து TNESக்கு கொண்டு வருவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க தமிழக அரசை கேட்டுக்கொள்ள தீர்மானிக்கப்படுகிறது.

7. 29 ஆண்டுகளாக அரசாணை எண்.1 பொபது நாள் 02.01.1990க்கு விதித்திருத்தம் வழங்கப்படாமல் உள்ளது. இதனால் ஊட்டுப்பதவியிலிருந்து உதவிப் பொறியாளர்களாக வந்தவர்கள் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகி வருகிறார்கள். எனவே உடனடியாக விதித்திருத்தம் வழங்க வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

8. பகுதிநேர பட்டம் பயின்ற சில இளநிலைப் பொறியாளர்களுக்கு, உள்நோக்கத்தோடு ஆணை வழங்கப்பட்ட தேதியிலிருந்து பதவி பெயர் மாற்றம் (Redesignation) வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே உள்ள விதிகளின்படியும், உச்சநீதிமன்ற தீர்ப்பின்படியும் தேர்வு முடிவுகள் வெளியான தேதியிலிருந்து பதவி பெயர்மாற்றம் வழங்க இம்மாநில பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

9. வருடந்தோறும் கமுக்க அறிக்கை (Confidential Report) சமர்ப்பிக்காத செயற் பொறியாளர் மற்றும் மேலோப்பம் இட தவறிய கண்காணிப்புப் பொறியாளர்கள் மீது துறை வாரியாக நடவடிக்கை எடுக்க இம்மாநில பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

10. கமுக்க அறிக்கை (Confidential Report) அனுப்பப்பட்ட விவரங்கள் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகத்தில் பெறப்பட்ட விவரங்களை பணிப்பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

11. பொதுப்பணித்துறையில் தேவையற்ற பல தலைமைப் பொறியாளர் பதவிகள் உருவாக்கப்பட்டு அரசின் பணம் வீணடிக்கப்படுகிறது. 7 தலைமைப் பொறியாளர் பதவிகள் காலியாக இருந்த போதும் பொதுப்பணித்துறை சிறப்பாக செயல்பட்டு வந்தது. எனவே தேவையற்ற தலைமைப் பொறியாளர் பதவிகளை குறைக்க வேண்டும் என இம்மாநில பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

12. தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகத்தில் நிலுவையில் உள்ள விதித்திருத்த கோப்புகளை அனுப்ப இம்மாநில பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

13. தலைமைப் பொறியாளர் (பொது) அலுவகத்தில் இளம்பொறியாளர் / உதவிப்பொறியாளர் தேர்வு நிலை கோப்புகள் (Selection Grade) நீண்ட நாட்கள் நிலுவையில் வைக்கப்படுகிறது. உடனுக்குடன் தேர்வு நிலை கோப்புகள் முடிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

14. அரசிடமிருந்து கூடுதல் விவரங்கள் கேட்டு தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகத்திற்கு அனுப்பப்படும் கோப்புகள் மாதக்கணக்கில், ஆண்டுக் கணக்கில் பதிலளிக்காமல் வைத்துக் கொள்ளப்படுகிறது. உடனுக்குடன் பதிலளிக்க வலியுறுத்தி தீர்மானிக்கப்படுகிறது.

15. பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்த துறையின் ஆணையை மதித்து உரிய கால இடைவெளியில் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களின் குறை தீர்ப்பு கூட்டம் நடத்த தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களுக்கு அறிவுரை வழங்க அரசை வலியுறுத்துவது என தீர்மானிக்கப்படுகிறது.

16. பொதுப்பணித்துறையில் திட்டப் பணிகள் செம்மையாக நடைபெற புதியதாக 500 தொழில்நுட்ப உதவியாளர் பணியிடங்களை உருவாக்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை கேட்டுக்கொள்ள தீர்மானிக்கப்படுகிறது.

17. பணிநீக்கம் செய்யப்பட்டு மீண்டும் மறு பணியமர்வு செய்யப்பட்ட இளநிலைப் பொறியாளர்களின் பணியிடைக்காலம் பிழை பொறுத்தல் கோப்பு (Break in Condonation) விரைவில் முடிக்க முதன்மை தலைமைப்பொறியாளரை வலியுறுத்த தீர்மானிக்கப்படுகிறது.

18. பொதுப்பணித்துறையில் பணிபுரிந்து வரும் தினக்கூலி பணியாளர்களை பணிவரன் முறைப்படுத்த தமிழக அரசை இம்மாநில பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

19. நீர் நிலைகளை சிறப்பாக பராமரிக்க பாசன ஆய்வாளர் பதவிகளை நிரப்ப வேண்டும் என அரசை வலியுறுத்த தீர்மானிக்கப்படுகிறது.

20. தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் சார்பாக வெளியிடப்படும் பொறியியல் கதிர் மாத இதழுக்கு த.முருகேசன் பொதுச்செயலாளர் அவர்கள் ஆசிரியராகவும், எஸ்.கே.கருப்புச்சாமி அவர்கள் வெளியீட்டுச் செயலாளர் ஆகவும் செயல்பட தீர்மானிக்கப்படுகிறது.

21. சென்னை இல்லக் காப்பாளராக பொறியாளர் எஸ்.கே.கருப்புச்சாமி அவர்களை நியமிக்க தீர்மானிக்கப்படுகிறது.

22. சென்னையில் உள்ள பொறியியல் இல்லத்தை போலவே கோயம்புத்தூரில் உள்ள பொறியியல் இல்லத்தையும் மையச்சங்கத்தின் கட்டுப்பாட்டில் கொண்டு வருவது என தீர்மானிக்கப்படுகிறது.

23. கோயம்புத்தூர் பொறியியல் இல்லக் காப்பாளராக கோயம்புத்தூர் கிளைச்செயலாளர் பொறியாளர் கே.என்.ரஞ்சன், உறுப்பினர் பொறியாளர் ஜி.பாலசுப்ரமணியம் ஆகியோரை நியமிக்க தீர்மானிக்கப்படுகிறது.

24. 2019-2020 ஆம் ஆண்டிற்கான தணிக்கை குழுவுக்கு சிவகங்கை கிளைப் பொருளாளர் பொறியாளர் எஸ்.குமார், தேனி கிளை செயலாளர் பொறியாளர் எஸ்.மயில்வாகனன் ஆகியோர்களை நியமிக்க இந்த மாநில பொதுக்குழுவில் தீர்மானிக்கப்படுகிறது.

25. பொங்கும் நிதி திட்டத்தில் உறுப்பினராக இருந்து ஓய்வு பெறும் உறுப்பினர்கள் 5 ஆண்டுகளுக்குள் முதிர்வு தொகையை பெறாவிட்டால் இந்த பணம் மையச்சங்கத்தின் பொதுநிதியில் சேர்க்கப்படும் என தீர்மானிக்கப்படுகிறது.

26. கோவிலம்பாக்கத்தல் உள்ள சங்கத்திற்கு சொந்தமான இடத்தை விற்று விட்டு மாநகர எல்லைக்குள் வேறு இடம் வாங்கி புது கட்டிடம் கட்ட வேண்டும் என்ற கோரிக்கை கடந்த சில ஆண்டுகளாக கூட்டத்தில் முன்வைக்கப்பட்டு வருகிறது. அதற்கு பொதுச்செயலாளர் திரு.D.முருகேசன் அவர்கள் மறுப்பு தெரிவித்து வந்தார். ஆனால் இந்த கோரிக்கை வலுக்கவே தற்போது முதற்கட்டமாக இது சம்பந்தமாக ஒரு குழு அமைப்பது என்று தீர்மானிக்கப்படுகிறது. இந்த குழுவில் யார் யார் இடம் பெறுவார்கள் என்று அடுத்த மாநில செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும்.

29. It is resolved to permit the newly elected General Secretary Thiru.D.MURUGESAN and Secretary Finance Thiru. S. PARTHASARATHY jointly to operate the General Account of Tamil Nadu Engineering Association and S.B. Accounts, Current Accounts, Cash Certificates, Recurring Deposits, Fixed Deposits etc., standing with.

a. Chennai Central Co-operative Bank, Chepauk, Chennai -5.

b. Indian Bank, Chennai - 5.

c. State Bank of India, Chepauk, Chennai - 5.

d. Tamil Nadu Power Finance & Infrastructure Development Corporation, Chennai - 18.

30. It is resolved to permit the newly elected General Secretary Thiru.D.MURUGESAN and Secretary Ponkum Nidhi Thiru.N.PUNNIAKOTTI Jointly to operate the various Accounts of Tamil Nadu Engineering Association Ponkum Nidhi, Fixed Deposits, Cash Certificates, etc., standing with.

a. Chennai Central Co-operative Bank Ltd., Chepauk Branch.

b. Tamil Nadu Power Finance & Infrastructure Development Corporation, Chennai - 18.

c. TamilNadu Transport Development Finance Corporation, Chennai

d. Royapettah Benefit Fund Limited, Chennai - 14.

நன்றி: இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ் நாள்: 12.08.2019

# Fill vacancies for junior engineers in PWD: Assn


EXPRESS NEWS SERVICE @Madurai

THE state-level annual general body meeting of Tamil Nadu Engineering Association (Public Works Department) was held at Hotel Tamil Nadu on Sunday.

State general secretary D Murugesan urged the State to fill the vacancies for Junior Engineers and Work Inspectors. The meeting was attended by nearly 100 engineering employees working with the PWD.


Murugesan said, "Akin to other government departments, a designated IAS officer must be appointed to oversee the affairs of PWD. The State must fill the 304 vacancies for Junior Engineers."

## மூத்தப் பொறியாளர்கள் கௌரவிக்கப்படுகிறார்கள்


















## பொதுச்செயலாளர் ஊடகங்களுக்கு பேட்டி





## பொதுக்குழுக் கூட்ட நிகழ்வுகள்



முன்னாள் அமைப்பு மற்றும் சட்டச்செயலாளர் பொறியாளர்
எஸ்.கண்ணன் அவர்களுக்கு பணிஓய்வு பாராட்டு



முன்னாள் நிதிச்செயலாளர் பொறியாளர் கொ.கமால்தீன்
அவர்களுக்கு பணிஓய்வு பாராட்டு



முன்னாள் அமைப்பு மற்றும் சட்டச்செயலாளர் பொறியாளர் எஸ்.கண்ணன் மற்றும் நிதிச்செயலாளர் பொறியாளர் கொ.கமால்தீன் ஆகியோரது பணிஓய்வு பாராட்டு விழாவில் மைய மண்டல செயலாளர் வாழ்த்துரை




திருநெல்வேலி - தூத்துக்குடி கிளை உறுப்பினர் பொறியாளர் என்.கோபாலகிருஷ்ணன் செயற்பொறியாளர் அவர்களின் மகன் திரு.ஜி.சிவா மோனிஷ்குமார் அவர்கள் நீட் தேர்வில் 670 மதிப்பெண்கள் பெற்று தமிழக அளவில் 4வது இடத்தையும் இந்திய அளவில் 221வது இடத்தையும் பெற்று சென்னை மருத்துவ கல்லூரியில் இளநிலை மருத்துவ படிப்பிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளமைக்கு பொதுச்செயலாளர் பாராட்டு



கல்விப் பரிசு திட்டம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு
கிளைச்சங்கப் பொறுப்பாளர்கள் மூலமாக பரிசு வழங்கப்படுகிறது.








## மூத்தப் பொறியாளர்கள் கௌரவிக்கப்படுகிறார்கள்













# பொதுக்குழுக் கூட்ட நிகழ்வுகள்

















## பொதுக்குழுக் கூட்ட நிகழ்வுகள்







## முன்னாள் அமைப்பு மற்றும் சட்டச்செயலாளர் பொறியாளர் எஸ்.கண்ணன் அவர்கள் பணிஓய்வு பாராட்டு விழா நிகழ்வுகள்












## முன்னாள் நிதிச்செயலாளர் பொறியாளர் கொ.கமால்தீன் அவர்கள் பணிஓய்வு பாராட்டு விழா நிகழ்வுகள்







தேர்தல் அலுவலர்கள் கௌரவிக்கப்படுகிறார்கள்







தணிக்கையாளர்கள் கௌரவிக்கப்படுகிறார்கள்







# பொறியாளர் எஸ். கணபதி கல்விப் பரிசு திட்டம்
## 10-ம் வகுப்பு


## பரிசு பெற்றவர்கள்



முதல் பரிசு
M. மாலினி
த/பெ. N. முருகேசன்
திருச்சி கிளை
457/500 - 91.4%



இரண்டாம் பரிசு
S. விமல்
த/பெ. T. செல்லன்
திருச்சி கிளை
443/500 - 88.6%



மூன்றாம் பரிசு
A. அமிர்த தர்ஷினி ஜெயவேலா
த/பெ. K. ஆதிமூலம்
திருநெல்வேலி - தூத்துக்குடி கிளை
441/500 - 88.2%

## நன்கொடை

தமிழ்நாடு பொறியியல் சங்கம் மதுரை கிளை உறுப்பினர் பொறியாளர் G.சுப்ரமணியம் இளம் பொறியாளர் (ஓய்வு) அவர்கள் சென்னை பொறியியல் இல்லம் புனரமைப்பு நிதியாக ரூ.5000/- (ஐயாயிரம் மட்டும்) வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் கோயம்புத்தூர் - பொள்ளாச்சி கிளை உறுப்பினர் பொறியாளர் P.ஜெயந்தி உதவிசெயற்பொறியாளர், நிலநீர் உபகோட்டம் அவர்கள் சென்னை பொறியியல் இல்லம் புனரமைப்பு நிதியாக ரூ.2000/- (இரண்டு ஆயிரம் மட்டும்) வழங்கியுள்ளார்.

நன்றி: தினமலர் நாளிதழ் நாள்: 12.08.2019

# ஐ.ஏ.எஸ்., தலைமையில் பொதுப்பணித்துறை

## பொறியியல் சங்கம் வலியுறுத்தல்

**மதுரை, ஆக. 12 –**

''நேர்மையான, திறமையான நிர்வாகம் நடக்க ஐ.ஏ.எஸ்., அதிகாரி தலைமையின் கீழ் பொதுப் பணித்துறையை கொண்டு வர வேண்டும்,'' என, மதுரையில் பொறியியல் சங்க மாநில பொதுச் செயலாளர் முருகேசன் வலியுறுத்தினார்.

சங்க மாநில பொதுக் குழு கூட்டம் நேற்று நடந்தது. துணை தலைவர் பாஸ்கர் வரவேற்றார். மாநில தலைவர் லீலாவதி, சட்ட அமைப்பு செயலாளர் கண்ணன், நிதி செயலாளர் புன்னியகோடி முன்னிலை வகித்தனர். தலைமை வகித்து முருகேசன் பேசியதாவது:

பொதுப்பணித்துறை நிர்வாகம் மேம்பட பொறியியல் பணி விதிகளில் உள்ளது போல் உதவி செயற்பொறியாளர் பதவிகளில் 5.88 சதவீதத்தை நேரடி நியமனம் மூலம் தேர்வு செய்ய வேண்டும்.

பணியாளர் தேர்வாணையத்தில் நிலுவையிலுள்ள 304 இளநிலை பொறியாளர் பதவிகளை நிரப்ப வேண்டும்.

பொதுப்பணித் துறையில் தேவையற்ற பல தலைமை பொறியாளர் பதவிகளால் மக்கள் வரிப்பணம் வீணடிக்கப்படுகிறது. தேவையற்ற தலைமை பொறியாளர் பதவியிடங்களை குறைக்க வேண்டும்.

நேர்மையான நிர்வாகம் நடக்க ஐ.ஏ.எஸ்., அதிகாரி நிர்வகிக்க வேண்டும் என்றார்.

ஏற்பாடுகளை கிளை செயலாளர் ரவிச்சந்திரன், மைய மண்டல செயலாளர் தமிழ்செல்வம் செய்தனர்.




■ மதுரையில் பொறியியல் சங்க மாநில பொதுக்குழு கூட்டத்தில் பொது செயலாளர் முருகேசன் பேசினார். வலமிருந்து, நிர்வாகிகள் பாஸ்கர், கண்ணன், லீலாவதி, புன்னியகோடி.

# பொதுக்குழுக் கூட்ட நிகழ்வுகள்




# பொதுக்குழுக் கூட்ட நிகழ்வுகள்



Under Postal Regd No. TN/CH/(C)/358/18-20 & WPP LICENCE NO.TN/PMG (CCR) WPP No.308/ 2018-20 Date of Publiciation - 1 st Week of Every Month. R.N.I. Registration No.R.33590/78.

**September 2019**



**Er. S. BASKARAN**
President



**Er. C.P. MOHANKUMAR**
Vice President



**Er. D. MURUGESAN**
General Secretary



**Er. S. SHANMUGANANTHAN**
Secretary (Oraganisation & Legal)



**Er. S.K. KARUPPUCHAMY**
Secretary (Publication)



**Er. S. PARTHASARATHI**
Secretary (Finance)



**Er.N. PUNNIAKOTTI**
Secretary (Pongumnithi)



**Er. A.ANBUCHEZHIAN**
Zonal Secretary (North)



**Er. R. VEDAMOORTHY**
Zonal Secretary (East)



**Er. V.KASIVISWANATHAN**
Zonal Secretary (West)



**Er. V. RAMAKRISHNAN**
Zonal Secretary (South)



**Er. V. PARAMASIVAM**
Zonal Secretary (Central)

தொலைபேசி : சங்கம் : 28525786
இல்லம் : 28551993

**பொறியியல் கதிர்**
**PORIYIYAL KADHIR**

அனுப்புநர்:
தமிழ்நாடு பொறியியல் சங்கம்
சேப்பாக்கம், சென்னை - 600 005.
முகவரி சரியில்லையேல் திருப்பி அனுப்பவும்

Posted on
**19.09.2019**

**REGD. NEWS PAPER**
POSTED AT EGMORE RMS1/ PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM

பெறுநர்

**PRINTED BY:Mr. J. VINOTH, AND PUBLISHED BY Er.S.K. KARUPPUCHAMY, D.C.E.AMIE., ON BEHALF OF TAMIL NADU ENGINEERING ASSOCIATION PWD, AND PRINTED AT AALAYAM ART PRINTERS, NO.5, HAJ HUSSAIN STREET, ICE HOUSE, CHENNAI-14. AND PUBLISHED AT TAMIL NADU ENGINEERING ASSOCIATION PWD, PWD CAMPUS, CHEPAUK, CHENNAI-5 EDITOR Er.S.K. KARUPPUCHAMY,**